2017 ஜூலை 6]

ஆய்வுக்கு வந்திருக்கின்றேன். அங்கே சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக, கலந்தாய்வு நேரத்தில், மருத்துவர்கள் P.G. படிப்பிற்காகச் செல்கின்றபோது, ஏற்படும் தற்காலிகமான காலிப் பணியிடங்களுக்கு உடனடியாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மருத்துவர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. அந்த மருத்துவமனையில் காலிப் பணியிடங்கள் இருந்தால், உடனடியாக நிரப்பப்படும், மருந்து தட்டுப்பாடு என்ற நிலையே இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

ஒருங்கிணைந்த அலுவலக வளாகம்

***18937—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், பல்துறை அலுவலகங்களும் இயங்கும் வகையில் ஒருங்கிணைந்த அரசு அலுவலக வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: அன்புத் தெய்வம் எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், எங்கள் அமைச்சர் அவர்களையும் பணிவோடு வணங்குகிறேன்.

கலையுலகில் அவதரித்து, தருமமே உருவாகி, தமிழினத்தை வளர்த்திட்ட, விழி அசைவில் சாதனையை, விரல் அசைவில் சரித்திரத்தை, அன்றாடம் படைத்திட்ட எங்கள் அன்புத் தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) போதுமான இடவசதிகள் உள்ள பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பல்துறை அலுவலகங்களும் இயங்கும் வகையில் ஒருங்கிணைந்த அரசு அலுவலக வளாகம் அமைத்துத்தர மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி வட்டம், நகர வார்டு, பி–பிளாக் 50, டி.எஸ்.நெ.8–ல் பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகம் இரண்டு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. அதன் தெற்குப் பகுதியில் வணிக வரி அலுவலகம் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. கிழக்குப் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் சார்பில் நடத்தப்படும் பெண்கள் விடுதி 50 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பிற அரசு அலுவலகங்களும் சொந்தக் கட்டடங்களில் ஆங்காங்கே தேவையான நிலப்பரப்பில் அமைந்துள்ளன. மொத்தம் 11 ஏக்கர் இருக்கக்கூடிய அந்த வளாகத்தில் 7 ஏக்கர் நிலம் காலியாக இருக்கின்றது. அந்த 7 ஏக்கர் நிலத்தினைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையினை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த வட்டாட்சியர் அலுலகத்தினை ஒட்டி, காலியாக இருக்கக்கூடிய அந்த 7 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த அரசு அலுவலக வளாகம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சரின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர்

2017 ஜூலை 6]

அவர்களின் மக்கள் நலன் சார்ந்திருக்கிற அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

படகு குழாம்

***8571—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, உக்கடம் பெரியகுளத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள், கோயம்புத்தூர் தென் பகுதியிலுள்ள உக்கடம் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பெரியகுளத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியினை வினவியிருக்கின்றார்கள்.*

கோயம்புத்தூர் தென் பகுதியிலுள்ள உக்கடம் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பெரியகுளம், கோயம்புத்தூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், பெரியகுளம் கரையில்